## ஐகெழசஅயவழைெ கழச ீயசநவெள ழக நெறடல யசசளைநன
## ளவரனநவெள றாழ நெநன வழ டநயசெ நுபெடளைா

### ஆங்கில மொழி பாடசாலைகளும் மையங்களும்

விக்டோறிய அரசாங்கப் பாடசாலைகளில் பதிவுசெய்திருக்கும் ஆங்கிலம் கற்க வேண்டியிருக்கும், புதிதாக வந்துசேர்ந்த மாணவர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சி இலாகா ஆங்கில மொழி கற்பிக்கும் செயல் திட்டங்களை வழங்குகின்றது. ஆங்கில மொழிப் பாடசாலைகள் அல்லது மையங்களினால், ஒழுங்கு செய்யப்பட்டு, அல்லது நடைபெற்றுவரும் புதிதாக வந்துசேர்ந்தோருக்குரிய திட்டங்களில், பாடசாலைக்கு அனுமதிபெற தகுதியான வயதுடைய மாணவர்கள் பதிவு செய்யலாம்.

இந்தத் திட்டங்கள் ஆரம்ப அல்லது இடைநிலைப் பாடசாலைகளில் கல்வி கற்கத் தேவைப்படும் ஆங்கில மொழித் திறன்களை மாணவருக்கு கற்பிப்பதை குறிக்கோளாய்க் கொண்டுள்ளன.

ஆங்கில மொழிப் பாடசாலைகளும் மையங்களும் மெல்பேர்ண் நகர்ப்புறங்களில் அமைந்துள்ளன. இவை மாணவருக்கு முழுநேர வகுப்புகளை வழங்குகின்றன. இவை ஆரம்பம் மற்றும் இடைநிலைப் பாடசாலை மாணவருக்கு வருடம் 10 வரை சேவையாற்றுகின்றன.

ஆங்கில மொழிப் பாடசாலைகள் மாணவருக்கு ஆயத்த முதல் வருடம் முதல் வருடம் 10 வரை சேவையளிக்கின்றன. ஆங்கில மொழி மையங்கள் மெல்பேர்ண்னிற்க்கு அருகாமையிலுள்ள பிரதான ஆரம்பம் மற்றும் இடைநிலைப் பாடசாலைகளில் அமைந்துள்ளன. ஆங்கில மொழி மையங்கள் வருடம் 7-10 வரையுள்ள இடைநிலை மாணவருக்கு அல்லது ஆயத்த முதல் வருடம் தொடக்கம் வருடம் 6 வரையுள்ள ஆரம்ப வகுப்பு மாணவருக்கு சேவையாற்றுகின்றன.

ஆங்கில மொழிப் பாடசாலைகளும் மையங்களும் பின்வரும் வசதிகளை வழங்குகிறது:

- ஆங்கிலம் கற்பிப்பதில் பிரத்தியேகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்.
- 13 மாணவர்கள் மட்டில் கொள்ளும் சிறிய அளவு வகுப்புகள்.
- தகுதியுள்ள மாணவருக்கு ரயில் மற்றும் பேருந்துகளில் பயணம் செய்ய இலவச அனுமதிப் பத்திரங்கள்.

சில வேளைகளில் ஆங்கில மொழிப் பாடசாலை அல்லது மையத்திற்கு செல்ல முடியாத ஆரம்ப பாடசாலைக்குரிய வயதுடைய மாணவருக்கு, வாரத்திற்கு 4 நாட்கள் வரை உள்ளூர் ஆரம்ப பாடசாலையில் தீவிரமான ஆங்கில வகுப்புகளுக்கு சமூகமளிக்கும் வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. தீவிரமான ஆங்கில வகுப்புகளுக்கு சமூகமளிக்கும் வேளை போக ஏனைய நேரங்களில் மாணவர்கள் தங்கள் சொந்தப் பாடசாலைத் திட்டங்களில் பங்குபற்றுவார்கள்.

நாட்டுப்புற விக்டோறியாவில் சில புதிதாக வந்து சேர்ந்தோருக்கான திட்டங்கள் இயங்குகின்றன.

### யார் இந்தத் திட்டத்திற்கு தகுதி பெறுவர்?

- அவுஸ்திரேலியாவிற்கு வந்து சேர்ந்து 6 மாதத்திற்கு குறைவாகவும், நிரந்தர வதிவுரிமையுடையவராகவும், ஆங்கிலம் கற்பது ஒரு புதிய முயற்சி என்று கருதப்படும் எல்லா மாணவர்கள் (ஆயத்த முதல் வருட மாணவர்களுக்கு வந்து சேர்ந்து 18 மாதத்திற்குள்).
- தற்காலிக வதிவுரிமையுடைய, அவுஸ்திரேலியாவிற்கு வந்து சேர்ந்து 6 மாதத்திற்கு குறைவாகவும் இருக்கும் ஆங்கிலம் கற்பது ஒரு புதிய முயற்சியாகவும் உள்ள சில மாணவர்கள் (ஆயத்த முதல் வருட மாணவர்களுக்கு வந்து சேர்ந்து 18 மாதத்திற்குள்).

சில சமயங்களில் புதிதாக வந்து சேர்ந்து ஆங்கிலம் கற்க வேண்டியிருந்தால் மேற்கூறிய விதிகளுக்கு அமையாமல் தகுதியடைவார்கள். உங்கள் பிள்ளை புதிதாக வந்து சேர்ந்தோருக்கான திட்டத்திற்கு தகுதியுடையவரா என்று அறிய உங்கள் உள்ளூர் ஆங்கில மொழிப் பாடசாலையை அல்லது மையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**குறிப்பு:** விக்டோறிய அரசாங்க பாடசாலையில் உங்கள் பிள்ளையை பதிவு செய்ய உங்கள் பிள்ளை பாடசாலை ஆரம்பமாகும் வருடத்தில் ஏப்ரல் மாதம் 30ம் திகதி, ஆகக் குறைந்தது 5 வயதை அடைந்திருக்க வேண்டும். 6 தொடக்கம் 15 வயதிற்கு இடைப்பட்ட பிள்ளைகள் பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட மாற்று போதனைத் திட்டத்திற்கு சமூகமளிக்க வேண்டும். சாதாரணமாக மாணவர்கள் இடைநிலைப் பாடசாலைக்கு மாற்றப்படுமுன் ஆரம்ப பாடசாலையில் (ஆயத்த முதல் வருடம் முதல் வருடம் 6 வரை) 7 வருடங்கள் செலவளித்திருக்க வேண்டும்.

### புதிதாக வந்து சேர்ந்தோர் திட்டத்தில் மாணவர்கள் பதிவு செய்வது எப்படி?

மாணவர்கள் ஆங்கில மொழிப் பாடசாலை அல்லது மையத்தில் நேரடியாகப் பதிவு செய்ய முடியும் அல்லது வேறு ஒரு அரசாங்கப் பாடசாலையால் சிபாரிசு செய்யப்பட முடியும்.

### இந்தத் திட்டம் எவ்வளவு காலம் வரை நீடிக்கிறது?

அநேகமாக இந்தத் திட்டம் 6 மாதங்கள் (இரண்டு பாடசாலைப் பருவங்கள்) வரை நீடிக்கிறது. மேலதிகத் தேவைகள் தேவைப்பட்டால் மாணவர்கள் 12 மாதங்கள் (நாலு பாடசாலைப் பருவங்கள்) வரை இருக்கலாம்.

**கற்பிக்கப்படும் பாடத்திட்டம் என்ன?**

ஆங்கில மொழிப் பாடசாலை மற்றும் மையங்களில் கற்பிக்கப்படும் பாடத்திட்டம் மாணவர்கள் ஆரம்பம் மற்றும் இடைநிலைப் பாடசாலைகளில் மேலதிகக் கல்வியைத் தொடருவதை குறி வைத்து அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு:

- கணிதம் மற்றும் அறிவியல் போன்ற பாடங்களினூடாக ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. மேலும் பிர-தானமான பாடசாலைகளின் கல்வியின் அடிப்படையில் பாடத்திட்டம் அமைந்துள்ளது.
- சமூகத்தில் நடமாடத் தேவையான ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது.
- அவர்களது புதிய நாட்டில் குடியமர உதவுவதுடன் ஒரு புதிய பாடசாலை ஒழுங்கு முறையை அறியவும் உதவப்படுகிறது.
- பாடசாலை வாழ்க்கை தடைப்பட்டிருந்தால் அல்லது அவர்களுக்கு வாசிக்கவும் எழுதவும் கற்க வேண்டியிருந்தால் விசேட உதவிகள் வழங்கப்படுகிறது.

மாணவர்கள் வயது மற்றும் ஆங்கில மொழித் திறன்களின் அடிப்படையில் வகுப்புகளில் அமர்த்தப்படுகிறார்கள்.

மாணவர்களின் ஆங்கில மொழிப் பாடசாலை அல்லது மையத்தின் திட்டம் முடிவுறும் போது அவர்கள் ஒரு பிரதான பாடசாலையை தெரிவு செய்ய உதவுவதோடு அந்தப் புதிய பாடசாலைக்கு மாறவும் உதவிகள் வழங்கப்படுகிறது.

**மாணவர் நலம்**

ஆங்கில மொழிப் பாடசாலைகளும் மையங்களும் மாணவர்களுக்கு வைத்தியம் மற்றும் பல் வைத்தியம் போன்ற ஆதார சேவைகளை அணுகவும் உதவி செய்யலாம்.

**குடும்ப உதவி**

விக்டோறியாவின் பாடசாலை ஒழுங்கு முறைகளைப் பற்றிய தகவல் கூட்டங்கள் மொழிப் பாடசாலை மற்றும் மையங்களினால் ஒழுங்கு செய்யப்படுகிறது. பேற்றோர் அவர்களது பிள்ளைகளின் முன்னேற்றம் பற்றி ஆசிரியர்களுடன் கலந்துரையாட மொழிபெயர்ப்பாளர்களின் உதவியோடு சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. பேற்றோர் அவர்களது பிள்ளையின் பாடசாலையை எப்போ வேண்டுமானாலும் தொடர்பு கொண்டு ஏதாவது கேள்விகள் அல்லது பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாட வரவேற்கப் படுகிறார்கள்.

புதிதாக வந்து சேர்ந்த மாணவர்களின் ஆங்கில மொழித் திட்டங்கள் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு உங்களுக்கு அருகாமையிலுள்ள ஆங்கில மொழிப் பாடசாலை அல்லது மையம் அல்லது புதிதாக வந்து சேர்ந்தோரது திட்டத்தைத் தொடர்பு கொள்ளவும்:

| | தொலைபேசி எண் | முகவரி | ஆரம்ப (P) இடைநிலை (S) |
|---|---|---|---|
| Blackburn ஆங்கில மொழிப் பாடசாலை | 9803 4022 | 120 Eley Road<br>Burwood East 3151 | P, S |
| Collingwood ஆங்கில மொழிப் பாடசாலை | 9419 7633 | Cambridge Street<br>Collingwood 3066 | P, S |
| Noble Park ஆங்கில மொழிப் பாடசாலை | 9546 9578 | 21–35 Thomas Street<br>Noble Park 3174 | P, S |
| Western ஆங்கில மொழிப் பாடசாலை | 9311 9325 | 46 South Road<br>Braybrook 3019 | P, S |
| Springvale ஆங்கில மொழி மையம | 9548 3496 | Springvale Road<br>Springvale 3171 | P |
| Broadmeadows ஆங்கில மொழி மையம் | 9309 1488 | Blair Street<br>Broadmeadows | S |
| Brunswick ஆங்கில மொழி மையம் | 9380 6889 | 47 Dawson Street<br>Brunswick 3056 | S |
| Glen Eira ஆங்கில மொழி மையம் | 9572 5877 | 76 Booran Road<br>Caulfield 3162 | S |
| Westall ஆங்கில மொழி மையம் | 9546 1732<br>9546 3233 | Rosebank Avenue<br>Clayton South 3169 | S |
| Geelong ஆங்கில மொழித் திட்டம் | (03) 5278 3548 | | P, S |
| Shepparton புதிதாக வந்து சேர்ந்தோர் திட்டம | (03) 5821 4322 | | P, S |